[1986 ஏப்ரல் 28

வளபன் ஆற்றில் மீன்பிடி பணிகள்.

604—(*வினா எண். 6455) திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், தொண்டியகாடு, கற்பகநாதர் குளம், கரையன்காடு பகுதியில் உள்ள மீனவர்கள் மீன்பிடிக்க வசதியாக தூர்ந்துவிட்ட வளபன் ஆற்றை தூர் எடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தற்போது இல்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தற்போது இல்லையென்று சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி தொகுதியில், தொண்டியக் காடு, கற்பகநாதர் குளம் ஆகியவை கடற்கரை ஓரமாக இருக்கக்கூடிய பிரதேசங்கள். அங்கே யிருக்கக்கூடிய பிற்பட்டவர்கள் அதிக மான பேர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கக் கூடியவர்கள். அந்த வளப நாட்டில், பழைய வாய்க்காலைத் தவிர, புதிதாக ஒரு வாய்க்கால் கடல் வரைக்கும் வெட்டப்பட்டிருக்கிறது. அதை வெட்டியதற்குப் பிறகு, பழைய வாய்க்கால் அப்படியே விடப் பட்டதனால், அந்தப் புது வாய்க்கால் மூலமாக வரக்கூடிய தண் ணீர் பழைய வாய்க்காலில் செல்வதனால் அங்கிருந்து வரக்கூடிய படகு புது வாய்க்கால் வழியாக கரைக்கும் வரமுடியாத நிலைமை தற்போது இருப்பதனால் மீன்பிடிக்கக்கூடியவர்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் தற்போது இல்லாவிட்டாலும் கூட அந்த விவரங்களைச் சேகரித்து, அந்தப் புதிய வாய்க்காலை மேலும் தூர் எடுத்து, மீன்பிடித்து வரக் கூடிய படகு கரைக்கு வரக்கூடிய நிலையை உருவாக்கித் தரு வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கொள்கை விளக் கக் குறிப்பில்கூட இதுபற்றி நான் தெளிவாக உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். கடலோரங்களிலே இருக்கின்ற பல்வேறு இடங்களில், காட்டாற்று முகத்துவாரங் களில் மண் தேங்கி விடுவதால் வெளியிலேயிருந்து படகுகள் கட லுக்குச் செல்லமுடியாத ஒரு நிலைமை இருப்பதையும் அறிந்து இதுபற்றி முழு விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அந்த முகத்துவாரப் பகுதியில் படகுகள் தாராளமாகச் செல்வதற்கு தூர் வாருகின்ற ஒரு பணியை இவ்வரசு மேற்கொள்வதற்குத் தேவையான பரிசீலனை நடந்து வருகிறது.

1986 ஏப்ரல் 28]

திரு. போ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பதில் சொல்கிறபோது அமைச்சர் அவர்கள் பொதுவாகச் சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம் பொதுவாக அமைச்சர் அவர்கள் பார்த்துவிட்டு வந்த இந்தக் குறிப்பிட்ட பகுதி என்பது அமைச்சர் அவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரிந்த பகுதியாகும். இந்த தொண்டிய நாட்டுப் பகுதியைப் பொறுத்தவரையில் தனிக் கேள்வி என்று சொல்லி விடாமல் அமைச்சர் அவர்கள் அங்கே இரால் குஞ்சு வளர்ப்பதை பார்க்கவருகிறபோதுகூட அதை நேரில் பார்த்துவிட்டு வந்தார்கள். இந்த தொண்டிய நாட்டின் இன்னொரு பகுதியில் மரைக்காதுறை ஆறு ஒன்று இருக்கிறது. அதிலே 3 கிலோ மீட்டர், அந்த ஆற்றை வெட்டிக் கொடுக்காததனால், தில்லைவளாகம், இடும்பவனம் போன்ற பகுதிகளிலுள்ள பிற்படுத்தப்பட்ட மீனவர்கள் 100 கிலோ மீட்டர் சேற்றிலே நடந்து, 6 மணி நேரம் நடந்து அப்புறம் கடலுக்குச் சென்று மீன்பிடித்து மறுபடியும் 6 மணி நேரம் சேற்றிலே நடந்து கரை சேரக்கூடிய ஒரு கஷ்டமான சூழ்நிலை இருக்கிறது. இதை அமைச்சர் அவர்களும் நேரிலே பார்த்து வந்திருக்கிறார்கள். ஆகவே இந்த தொண்டிய நாட்டுப் பகுதி மீது விசேஷ கவனம் எடுத்துக்கொண்டு அந்தப் பகுதி மக்களுக்கு இந்தமாதிரி காரியங்களைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் உத்திர பதி அவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் கேள்வியாகத்தான் வைக்கிறார்களே தவிர, இது கோரிக்கையாக வரவில்லை. இது கோரிக்கையாக வந்திருக்குமேயானால் இதுசம்பந்தமாக இந்நேரம்கூட நாம் அந்த தூர் எடுக்கிற பணியை மேற்கொண்டிருக்கலாம். என்றாலும் இதை முடிந்த வரையிலே அந்தத் தொண்டியநாடு, கற்பகநாதர் குளம், கரையன்காடு பகுதியிலே உள்ள ஆற்றை தூர் எடுக்கிற பணியை இந்த ஆண்டில் முடிந்தால் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டப் பணிகள் மூலமாகச் செய்யமுடியுமா என்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து ஆலோசிக்கலாம் என்று இருக்கிறோம். அந்த வகையிலேயும் பார்ப்போம். மீன் வளத்துறை மூலமாகவும் இதுபற்றி அதிக கவனம் எடுத்துக்கொள்ளலாம்.

பெருங்காமநல்லூர் கால்வாய் திட்டம்.

605—(*வினா எண். 4390) திரு. பி. சே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுக்காவில் ''பெருங்காம நல்லூர் கால்வாய் திட்டம்'' ஏதும் ஆய்வில் உள்ளதா ?